1972 ஆகஸ்ட் 23]

இணைப்பு I.

[3 ஆம் பக்கத்திலுள்ள 73-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க].

வங்க தேசத்திலிருந்து அகதிகள் வந்த காரணத்தால் நமது அரசின் நிதி வாயல்கள், பொருளாதாரம் இவற்றில் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவாக இவ்வரசு 1971–72-ல் கீழ்க்கண்ட சிக்கன நடவடிக்கைகளைச் செயற்படுத்துமாறு உத்திரவிட்டது :—

(i) 1971–72-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் வளர்ச்சிப் பணித்துறைகளல்லாத பிற துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகைகளும், திட்ட வளர்ச்சிப் பணிகளல்லாத பிற பணிகளுக்கான செலவும் 5 சதவீதம் குறைக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டது. இவ்வாறு நிதி ஒதுக்கத்தையும் செலவையும் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்க நிர்வாக நிலைமைகள் அனுமதித்தவிடங்களில் எல்லாம் அவ்வாறே குறைக்கப்பட்டுள்ளது.

(ii) மேலும் பின்வரும் உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன :—

(a) 3—11—1971 அன்றுள்ளவாறு 3 மாதங்களுக்கும் மேலாக காலியாக இருந்துவந்துள்ள பதவிகளனைத்தும் 31—3—1972 வரை நிரப்பப்படக்கூடாது.

(b) 1971–72-ம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் பயணப்படி, தொலைபேசிக் கட்டணங்கள், வண்டிகளுக்கு பெட்ரோலும், எண்ணெயும், வண்டிகளைப் பேணுவதற்கான செலவுகள் மற்றும் பிற சில்லறைச் செலவுகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தில் 10 சதவீதம் குறைக்கப்பட வேண்டும்.

(c) அரசு திட்டவட்டமாக அனுமதித்தாலொழிய, மேசை, நாற்காலி முதலிய சாமான்கள் வாங்குவதற்கு எச்செலவும் செய்யக் கூடாது.

(d) துறைத் தலைவர்கள் தங்கள் கையிருப்பில் உள்ள பண்டங்கள், பொருட்கள் இவற்றின் இருப்புகளையொட்டி இவ்வாண்டுக்குப் பொருட்கள் வாங்குவது குறித்த தமது திட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும். குறைந்த அளவு தேவைப்படும் பொருட்கள் மட்டுமே கூடுதலாக வாங்கப்படுவதற்கு ஆணையிடப்

படுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் துறைத்தலைவர்கள் பொருட்களை வாங்குவதற்காகச் செய்யும் செலவில் ஒவ்வொரு நேர்விலும் 10 சதவீதத்திற்குக் குறையாமல் குறைத்துவிட வேண்டும்.

(e) திட்டத்தில் சாராமல் நடந்தேறிவருகிற கட்டிடப் பணிகள், சாலைப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தில் 10 சதவீதம் குறைக்கப்பட வேண்டும்.

(f) முற்றிலும் இன்றியமையாதவையாக இல்லாத எல்லா சிற்றுண்டி விருந்துகள், நிகழ்ச்சிகள், அரசு கேளிக்கை நிகழ்ச்சிகள் அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டும். இந்த சிற்றுண்டி விருந்துகளும், நிகழ்ச்சிகளும் அவசியமானவை என்று கருதப்பட்டால் அந் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சிற்றுண்டி விருந்துகளுக்கு அழைக்கப்படுகின்ற விருந்தினர்களின் எண்ணிக்கை மிக முக்கியமானவர்களை மட்டுமே கொண்ட மிகக்குறைந்த எண்ணிக்கையில் இருக்குமாறு வரையறுக்கப்பட வேண்டும்.

(g) துறைகளுக்கிடையிலான முறை மரபுக் கூட்டங்களின் போதும், பிற கூட்டங்களின் போதும் வழங்கப்படுகின்ற சிற்றுண்டிகள் வரையறுக்கப்பட்ட அளவில் இருக்க வேண்டும். இத்தகைய சிற்றுண்டிகள் வழங்கப்படுகின்ற நிகழ்ச்சிகள் தேவைப்படுகின்ற, குறிப்பிட்ட ஒரு சில சமயங்களில் மட்டுமே ஏற்பாடு செய்யப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக குறுகிய காலத்திற்கு நடைபெறும் கூட்டங்களின் போதும், துறைக்குள் நடைபெறும் கூட்டங்களின் போதும் சிற்றுண்டி வழங்கப்படக்கூடாது. தேநீர், காப்பி, குளிர் பானங்கள் இவை மட்டுமே வழங்கப்பட வேண்டும். திண்பண்டங்கள் இவை வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

(h) அடிக்கால் நாட்டு விழாக்கள், பொதுக் கூட்டங்கள் திறப்பு விழா முதலியவற்றின் போது அரசு திட்டவட்டமாக அதிகாரம் அளித்திருந்தால் ஒழிய எச்செலவையும் செய்யப் படலாகாது.